Regd no - DS/VAD/ N/SS/VOR/2012/57

VaiSWA

E-mail:vaiswa valvai @ gmail.com
Website:WWW.Valavai Malumiakal.com

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்.
valvai Seaman Welfare Association (Sri Lanka)
No - 786, Yarl Road, Valvettithurai
இல - 786, யாழ்வீதி, வல்வெட்டித்துறை

# 2012 - 2013 க்கான ஆண்டு அறிக்கையும் செயற்பாடுகளும்



**இளைஞர்களே, பெற்றோர்களே நலன் விரும்பிகளே எங்களுடன் இணைந்து செயற்பட வாருங்கள்.**

உங்கள் எதிர் காலத்தை ஒளி மயமாக்கவும் எமது தேசத்தைக் கட்டியெழுப்பவும் வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கான விழிப்புணர்வை உண்டாக்கவும் “**Vaiswa**” எனும் வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம், அனைத்து தமிழ் இளைஞர்களினதும் நலன் கருதி செயற்படுகின்றது.

VaiSWA

E-mail:Vaiswa Valvai @ Gmail.com
Websit:WWW.Valavai Malumiakal

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கம்.
valvai Seaman Welfare Association (Sri Lanka)
No - 786, Yarl Road, Valvettithurai
இல – 786, யாழ்வீதி, வல்வெட்டித்துறை

# 2012 - 2013 க்கான ஆண்டு அறிக்கையும் செயற்பாடுகளும்

**இளைஞர்களே, பெற்றோர்களே நலன் விரும்பிகளே எங்களுடன் இணைந்து செயற்பட வாருங்கள்.**

உங்கள் எதிர் காலத்தை ஒளி மயமாக்கவும் எமது தேசத்தைக் கட்டியெழுப்பவும் வேலை வாய்ப்புக்காக காத்திருக்கும் இளைஞர்களுக்கான விழிப்புணர்வை உண்டாக்கவும் "**Vaiswa**" எனும் வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம், அனைத்து தமிழ் இளைஞர்களினதும் நலன் கருதி செயற்படுகின்றது.

# வல்வை மாலுமிகள் நலன் புரிச்சங்கம்

# 23.10.2012 தொடக்கம் 23.10.2013 வரையிலான செயற்பாடுகளும் கணக்கறிக்கையும் கப்பத்துறைக் கற்கை நெறிகள் பற்றிய தகவல்களும்

**கப்பலில் தொழில் வாய்ப்புக்கள்**

**நிறைய வேலை வாய்ப்புக்கள், உயர்ந்த ஊதியம், காலத்திற்கு காலம் விடுமுறை, உழைப்புக்கும் கல்விற்கும் ஏற்ப பதவி உயர்வுகள், இலவசமாக உலகத்தை சுற்றிப்பார்த்தல் இன்னும் எத்தனையோ?..........**

**சங்கத்தின் ஆரம்பம்.**

வல்வை நலன்புரிச் சங்கமானது, பல வருடங்களுக்கு முன்பாக (1970களில்) இழுவைக் கப்பல் கப்டனாக இருந்த கப்டன் **அ.அம்பலவாணர்**, சுங்க இலாகா உதவி அத்தியரட்சகராக கடமையாற்றிய **திரு.பொ.வல்லிபுரம்** மற்றும் பல செயல்திறன் கொண்டவர்களால் ஆரம்பிக்கப்பட்டு திறமையாக செயற்படுத்தப்பட்டு வந்தது. அன்றயகால கட்டத்தில் வல்வைப் பொருளாதாரம் இக்கட்டான நிலையில் இருந்த போது பாய்மரக் கப்பலில் கொடிகட்டிப் பறந்த வல்வைப் பொருளாதாரம் தொடர்ந்து வந்த இந்தியாவுடனான பண்டமாற்று வாணிபத்திலும் தாக்குப்பிடித்து இறுதியில் முடங்கிய காலத்தில்தான் நவீன கப்பல்களில் தொழில் வாய்ப்புக்கள் ஏற்பட்டன. இவ்யுகத்தை ஆரம்பித்து வைத்தவர் கப்டன் **கா.மோகனதாஸ்**. அவர்களைத் தொடர்ந்து கொழும்புத் துறைமுகத்தில் இழுவைக் கப்பல் (TUG Boat)களில் தொழில் புரிந்த **கப்டன் அ.அம்பலவாணர்** போன்றோர் தங்கள் கப்பல்களிற்கு இளைஞர்களை அழைத்து (Basic Navigation) கப்பலோட்டுவது பற்றிய அடிப்படை கற்கை நெறிகளை கற்பித்து தொழில் வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்தார்கள். அக்காலத்தில் நவீன இயந்திரக் கப்பல் வாணிபத்தில் கிரேக்க நாடே (GREECE) முன்னணியில் இருந்தது. அதே காலத்தில் கொழும்பில் ஒரு சில கம்பனிகளே கப்பல் முகவர்களாக (AGENT) இருந்தார்கள். அதில் ஒரு முகவர் ஸ்தாபனமே வி.பி.ஞானக்கோன் ஸ்தாபனமாகும். இதில் முகாமையாளராகக் கடமையாற்றிய திரு.தாமோதரம் பிள்ளை மணிவாசகர் மூலம் கப்பலில் பலர் தொழில் பெறமுடிந்தது. அக்காலகட்டத்திலே தான் இச்சங்கம் 19, கிறீன்லேன், கொட்டாஞ்சேனை என்ற முகவரியில் அதாவது (கப்டன். அம்பலவாணர் அவர்களது விடுதி) ஆரம்பிக்கப்பட்டது. தொடர்ந்து அடிப்படைக்கற்கை நெறிகளை கற்பித்தல் தொழில் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தல் மாலுமிகளால் முகவர்களிற்கு செலுத்த வேண்டிய கட்டுப் பணத்தை வழங்கி தவணை அடிப்படையில் அவற்றை மீளப் பெறுதல் போன்ற சேவைகளை இச்சங்கம் செய்து வந்தது. வல்வைப் பொருளாதாரம் மீண்டும் மிளிரத் தொடங்கியது. ஒரு கட்டத்தில் எமது பொருளாதாரம் இத்துறையையே நம்பியிருந்தது என்பதை மறுக்கமுடியாது. ஆனால் நாட்டில் ஏற்பட்ட அரசியல் பிரச்சினையாலும், ஆயுதப் போராட்டத்தினாலும் கப்பலில் பணிபுரிந்தோர் பலர் அரசியல்

தஞ்சம் கோரி பல நாடுகளில் குடிபுகுந்தார்கள். அப்போதுதான் புலம்பெயர்வும் தீவிரமாக இடம் பெற்றுக் கொண்டிருந்தது. இதனால் கப்பல் தொழில்துறையில் சர்வதேச கப்பல்களில் தொழில் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டு மத்திய கிழக்கில் எரிபொருள் வினியோகக் கப்பல்களிலே மட்டும் வேலைவாய்ப்பு என்ற பட்சத்திற்கு முடக்கப்பட்டது. இதனால் இச்சங்கம் தொடர்ந்து இயங்கா நிலைக்குட்படவேண்டியதாயிற்று.

**அங்குரார்ப்பணம்**

நீண்ட உள்நாட்டு யுத்தம் முடிந்துள்ள இன்றைய கால கட்டத்தில் வெளிநாட்டு வேலை வாய்ப்பும் புலம் பெயர் நிகழ்வும் ஒரளவு முற்றுப் பெற்றதன் விளைவாக எமது படித்த இளைஞர்கள் பலர் நல்ல திறமையிருந்தும் எதுவித வழிகாட்டலுமின்றி தமது குடும்ப பொருளாதார நிலை நிமித்தம் கூலி வேலைகளுக்காக தேடி அலையும் பரிதாப நிலையும் ஏற்பட்டது. மாலுமிகள் சமூகத்திலும் பலர் தொழில் திறமையால் (BY WORK EXPERIENCE) பதவி உயர்வு பெற்றார்களேயன்றி ***சரியான வழிகாட்டலில் அதற்கான கற்கை நெறிகளைக் கற்று சித்தி அடைவதன் மூலம்*** சர்வதேச கப்பல்களில் உயர் பதவி பெற்று கூடிய சம்பளத்துடன் நிரந்தரத் தொழில் வாய்ப்பை பெறும் நிலையை இழந்து அவதிப்படும் நிலைமை தான் இருந்து வருகின்றது. இவற்றை அவதானித்த, சர்வதேசக் கப்பல்களில் உயர் பதவிகள் வகிக்கும் எம்மவர் சிலரும், இத்துறையிலிருந்து ஓய்வு பெற்று வெளிநாடுகளில் தொழில் புரிவோரும், வல்வை நகரின் நலன் விரும்பிகள் சிலரும் சேர்ந்து தீவிரமாக சிந்திக்கத் தொடங்கினார்கள். இவர்களுக்கிடையே தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டு ஆலோசனைகள் பரிமாறப்பட்டன. இதன் விளைவாக விழிப்புணர்வுக் கலந்துரையாடலொன்றினை 23.10.2011இல் வல்வை அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் ஒழுங்குபடுத்தியிருந்தோம். இதனை தற்காலிக தலைவராக திரு.சிவகுகதாஸன் மாஸ்ரர் பொறுப்பெற்று நடாத்தி வைத்தார். அதில் ஊர் பெரியவர்களும், அபிமானிகளும், மாலுமிகளும், மாலுமிகளாக சேரவிருப்போரும், அவர்களது பெற்றோருமாக சேர்ந்து, 60 பேர்வரை கலந்து கொண்டார்கள். இதில் **கப்டன் N.கலைநேசன்** சிறப்புரை யாற்றியிருந்தார். அவர் தனது உரையில் சர்வதேசக் கப்பல்களில் தொழில் வாய்ப்புகள், அதற்குரிய தகைமைகள் பற்றியும் சர்வதேசக் கடல்ச்சட்டங்கள் பற்றியும் யாழ் குடாநாட்டில் உருவாகவிருக்கும் சர்வதேச துறைமுகத்தை பற்றியும் அதில் ஏற்படும் தொழில் வாய்ப்புக்கள் பற்றியும் எடுத்துரைத்தார். மேலும் விபரிக்கையில் இதற்காக ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியிருந்தார். எனவே **"வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்"** என்ற பெயரில் ஒரு அமைப்பு அங்குரார்ப்பணம் செய்யப்பட்டு, 11 பேர் கொண்ட செயல் அணி ஒன்று தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்குள் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**செயற்குழு**

கலந்துரையாடலில் முடிவெடுத்தபடி செயலணி 24.10.2011ல் பார்வதி இலவச பாடசாலையில் கூடியபோது பின்வருவோர் உரிய பதவிகளுக்கு தெரிவுசெய்யப்பட்டனர்.

| | |
|---|---|
| தலைவர் | :– திரு. காத்தாமுத்து றஞ்சனதாஸ் |
| உப தலைவர் | :– திரு. பாலசுப்ரமணியம் உதயகுமார் |
| செயலாளர் | :– திரு. பூபாலகிருஷ்ணசாமி அகமணிதேவர் |
| உபசெயலாளர் | :– திரு. இரத்தினசாமி சண்முகதாஸ் |
| பொருளாளர் | :– திரு.துரைசாமி சத்திவேல் |
| நிர்வாக சபை உறுப்பினர் | :– திரு. விசாகப்பெருமாள் கிருஸ்ணமூர்த்தி |
| | திரு. இராமநாததாசன் இராஜேந்திரா |
| | திரு. மகேந்திரராசா சுலக்ஸன் |
| | திரு. கிருஸ்ணசாமி பஞ்சலிங்கம் |
| | திருமதி சியாமளா பாஸ்கரன் |
| இணைப்பாளர் | :– திரு.நடராசா சிவரெத்தினம் |
| | (சர்வதேச இணைப்பாளராகவும் கூடுதல் பணிபுரிதல்) |

செயற்குழுவினரின் தீர்மானத்தின்படி அடுத்த மாதமே மாலுமிகளுக்கான கற்கைநெறிகள் VDAG மண்டபத்தில் ஆரம்பமாகின.

### கற்கைநெறிகள்

### கப்பல் தளப்பகுதி (DECK SIDE)

இக்கற்கை நெறிகளை ஆரம்பத்தில் திரு.கி.பஞ்சலிங்கமும், திரு.இ.இராஜேந்திராவும் மேற் கொண்டிருந்தார்கள் **கப்டன்.சி.பாஸ்கரன்** வருகை தந்தபின் தொடர்ச்சியான வகுப்புக்களை மேற் கொண்டு வந்தார். இக்கற்கை நெறிகளில் கப்பலில் உபயோகிக்கும் கருவிகள், கப்பலின் பாகங்கள், சர்வதேச கடல்ச்சட்டங்கள் உட்பட தற்பாதுகாப்பு, தீயணைப்பு பொறி முறை, தீயணைப்புக்கருவிகள் பற்றியும் விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. கப்பலில் உயர் பதவிகளில் உள்ளோர்க்கு STABILITY பற்றிய விசேட கற்பித்தலும் மேற்கொள்ளப்பட்டது.

### இயந்திரப்பகுதி (ENGINE ROOM SIDE)

ஆரம்பத்தில் இளைப்பாறிய பிரதம கப்பல் பொறியியலாளர் **திரு.கா.றஞ்சனதாஸ்** அவர்கள் இதனை தொடக்கி வைக்க, விடுமுறையில் வந்த பிரதம பொறியியலாளர் **திரு.கு.விஜயசுந்தரத்தாலும்** அது மேற்கொள்ளப்பட்டு வந்தது. விடுமுறையில் வருகை தந்த மூன்றாவது பொறியியலாளர் **திரு.இ.யோகன்** அவர்களினாலும் விரிவுரைகள் மேற்கொள்ளப்பட்டது. விரிவுரைகளின் போது கப்பலில் உள்ள சகல இயந்திரங்களின் செயற்பாடுகள் குறித்தும், தற்பாதுகாப்பு, தீயணைப்பு பொறிமுறை, தீயணைப்புக் கருவிகள் பற்றிய விளக்கவுரைகள் போன்றனவும் மேற்கொள்ளப்பட்டன.

### பொதுவான கப்பல் பற்றிய அறிவு (GENERAL KNOWLEDGE OF SHIPS)

விடுமுறையில் வந்திருந்த **கப்டன் திரு. க.வைத்தியகுமார்** கப்பல் பற்றிய பொதுவான அறிவுகள் அதாவது தற்பாதுகாப்பு, கப்பலில் ஏற்படும் ஆபத்துக்களை எவ்வாறு தவிர்ப்பது, கப்பல் கட்டும் போது (MOORING) ஏற்படும் ஆபத்துக்கள், கயிறு அறுவதினால் ஏற்படும் விபத்துக்களிலிருந்து எவ்வாறு தற்காப்பு ஏற்படுத்துவது, மாலுமி ஒருவர் எவ்வாறு நஷ்ட ஈட்டுத்தொகையை (COMPENSATION) பெற்றுக் கொள்வது போன்ற விபரங்களை காணொளி மூலமும், விபரணப்படக்காட்சி மூலமும், வாய்மொழி மூலமும் விரிவுரைகளை மேற்கொண்டார்.

## Watch keeping Certificate

இச்சான்றிதழானது மாலுமி ஒருவர் 9 மாத சேவையின் பின்பு எடுக்கவேண்டிய கட்டாய சான்றிதழாகும். இச்சான்றிதழானது ஒரு நேர்முகப் பரீட்சையின் பின்பு கப்பல் போக்குவரத்து அலுவலகத்தினால் (Shipping Office) வழங்கப்படும். பயிற்சி மாலுமிகள் சிலர் இச்சான்றிதழை பெறுவதற்கு நாம் வழிகாட்டி, நேர்முகப் பரீட்சையை முகங்கொள்வதற்காகவும் அவர்களை தயார்படுத்தி அவர்கள் சித்தி எய்தி சான்றிதழைப்பெறவும் உதவியுள்ளோம். இச்சேவை எம்மால் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

### ஆங்கிலக் கல்வி (Spoken English)

ஆரம்பத்தில் இக்கற்கை நெறியை **திரு.கா.றஞ்சனதாசும் திரு.N.சிவரெத்தினமும்** மேற் கொண்டிருந்தார்கள். பின்னர் மலேசியா பல்கலைக்கழகமொன்றில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வந்த **செல்வி செவ்வந்தி பாஸ்கரன்** அவர்கள் தானாக முன்வந்து தொடர்ந்து கற்பித்து வந்தார். இவரது கற்பித்தல் திறனைக்கண்ட குடும்பப் பெண்கள், பாடசாலையிலிருந்து விலகிய மாணவிகள், பெண் அரசாங்க ஊழியர்கள் என சுமார் 45 பேர் வரை கற்கை நெறியில் சேர்ந்து பயன்பெற்றுள்ளார்கள். பெண்களின் பாதுகாப்புக் கருதி பெண்களுக்கென தனியாக வல்வை நகரசபை மண்டபத்தில் பிற்பகலிலும், மாலை நேரங்களில் மாலுமிகளுக்கென தனியாகவும் இவை மேற்கொள்ளப்பட்டன. இதில் **திருமதி சியாமளா பாஸ்கரன்** அவர்களாலும் வகுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இப்படி இவர்களது குடும்பமே Vaiswa விற்காக அர்ப்பணிப்பு செய்ததை முன்னிட்டு அவர்களுக்கு ஒரு நினைவுப் பரிசிலும் வழங்கி கௌரவித்துள்ளோம். அடிப்படை ஆங்கில அறிவூட்டல் வகுப்புக்கள் தேவைக்கேற்ப எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**கலந்துரையாடல் (Seminars)**

கப்பற்றுறை கற்கை நெறிகளில் ஆசியாவிலேயே புகழ்பெற்ற கொழும்பு சர்வதேச கப்பற்றுறை பொறியியல் கல்லூரி (CINEC) ஆனது யாழ்ப்பாணத்தில் மருதனார்மடத்தில் தமது கல்வி நிறுவனத்தின் ஒரு கிளையை ஆரம்பிக்க 2 வருடங்களுக்கு முன்பிருந்தே நடவடிக்கைகள் மேற்கொண்டு வந்தார்கள். எமது சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின்பு எம் உதவியையும் நாடியிருந்தார்கள். இவர்களுடன் சேர்ந்து வல்வையில் இரண்டு கலந்துரையாடல்களை (Seminars) ஏற்பாடு செய்திருந்தோம். இக்கிளை எங்களின் அனுசரணையால் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருவதுடன் நாமே இவர்களுக்கு மாணவர்களை புதிதாக அறிமுகப்படுத்துவதில் முன்னின்று உழைத்தும் வருகின்றோம்.

# CADET TRAINING

கடந்த காலங்களில் கப்பற்றுறையில் பயிலுனராக (CADET) சேர்ந்தவர்கள் யாவருமே தமது கடும் உழைப்பினால் படிப்படியாக 2nd Mate, Chief Mate என பதவிகளில் உயர்ந்து இறுதியில் Master mariner என்று அதியுயர் தகைமைகளைப் பெற்று, கப்டனாக தொழில்புரிந்து கொண்டிருக்கிறார்கள். **ஆரம்பத்தில் கப்டன் C.மோகனதாஸ் அவர்கள் வழிகாட்ட அவரைத் தொடர்ந்து கப்டன் T.தொம்மைப்பிள்ளை, கப்டன் E.துரைலிங்கம், கப்டன் V.ஜெயபால், கப்டன் P.விஜயகுமார், கப்டன் V.பாலசுப்பிரமணியம், கப்டன் V.சிவாஜி, கப்டன் A.ரவீந்திரதாஸ், கப்டன் V.ஜெயச்சந்திரன், கப்டன் K.ஜெயகுமார் கப்டன் N.கலைநேசன். கப்டன் S.பாஸ்கரன் கப்டன் S.ஸ்ரீகுமரேஸ்வரன்** என்போரும் **இவர்களைத் தொடர்ந்து கப்டன் K.வைத்தியகுமார், கப்டன் S.மணிவண்ணன், கப்டன். அ.ஆதவன், கப்டன் S.பால்ராஜ், கப்டன் V.பாலரூபன், கப்டன் அ.ஆசுகன், கப்டன் S.ரமேஸ், கப்டன் N.விநாயகமூர்த்தி (இவர்களுள் பலர் சாதாரண மாலுமியாக சோர்ந்து கப்டன்கள் ஆனாவர்கள்)** என்போரும் உயர்பதவிகளை வகித்து வருகின்றனர். தொடர்ந்து எவருமே முன்வர முயற்சித்ததாக தெரியவில்லை. Sea service Experience இனலோ அன்றி Exams மூலமாகவோ படிப்படியாக உயர்ந்து கப்பலில் உயர்பதவிகள் பெற்ற பலர் இன்னும் இருக்கிறார்கள். Engine Side லும் பல உயர்பதவிகளிலும் Chief Engineers களாகவும் பலர் இன்று தொழில் புரிகிறார்கள் அல்லது ஓய்வு பெற்றுள்ளார்கள். இவர்களினைப்பற்றிய பூரணமான தகவல்கள் Vaiswa விற்கு கிடைக்கவில்லை. எனவே நாம், பெயர்களை தவற விட்டவர்கள் தயவு செய்து அது பற்றிய மேலதிக தகவல்களை தந்துதவுமாறு கேட்டுக்கொள்வதுடன் இதற்காக நாம் **எமது மன்னிப்புக்களையும் கோரி நிற்கிறோம்.** இங்கு நாங்கள் **கப்டன் S.சிவநேசன்** அவர்களைப் பற்றி குறிப்பிடக் கடமைப்பட்டுள்ளோம். இவர் **கப்டன் C.மோனகதாஸ்** காலத்தில் அவருடன் இணைந்து கப்பல் துறைசார் கற்கை நெறிகளை ஆரம்பித்தவர். இப்படியான ஆளுமை கொண்ட இவர் Fishing trawler களை கையாள்வதில் மிகுந்த வல்லமை பொருந்தியவர். இவரைப் பற்றிய விசேட கட்டுரை ஒன்றை Vaiswa உங்களுடன் பகிர்ந்து கொள்ள காத்திருக்கின்றது.

இன்னும் இவர் எங்களுடைய கூட்டங்களிலும் கருத்தரங்குகளிலும் கலந்து கொண்டு எமக்கு பல ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். Vaiswa இவரை கௌரவத்துடன் வாழ்த்துகின்றது. இதே வேளை **கப்டன் E.துரைலிங்கம்** அவர்களும் U.K யிலிருந்து கொண்டு தனது ஆலோசனைகளை வழங்கி வருகின்றார் என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன்றாகும்.

கற்கை நெறிகளை இளைஞர்கள் மேற்கொள்ளாமைக்குக் காரணம், தகுந்த வழிகாட்டலும், இத்துறை பற்றிய அறிவும், சிறந்த விழிப்புணர்வும் அவர்களுக்கு எட்டாமல் போனதே. இதனால் பயிலுனர் துறையில் நீண்ட இடைவெளி ஏற்பட்டது. VAISWA என அறியப்படும் Valvai Seaman Welfare Association தோன்றுவதற்கு இதுவும் ஒரு காரணம். ஸ்ரீலங்காவில் கடந்த பல வருடங்களாக CINEC கல்வி நிறுவனம் பயிலுனர்களை கற்கை நெறி ஒன்றிற்கு 30 முதல் 40 வரை உள்வாங்கி பயிற்றுவித்துக் கொண்டிருந்தது. இது கட்டண அடிப்படையில் இடம்பெற்றது. இதற்கும் கடும் போட்டி, கடுமையான பரீட்சை, சிபாரிசு என்ற ஏகப்பட்ட கெடுபிடிகள். மக்களிடையேயும் இளைஞர்களிடையேயும் கப்பற்றுறை பற்றிய விழிப்பணர்வு, வேலைவாய்ப்பு என்பவற்றை தெளிவுபடுத்தும் நோக்கமாக எமது சர்வதேச இணைப்பாளர் **திரு.ந.சிவரெத்தினம்** அவர்களால் ஒரு கைநூல் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது மட்டுமல்லாது, அது தொடர் கட்டுரைகளாக வலம்புரி, உதயன் போன்ற உள்ளூர் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டன. மேலும் Valvai.com என்ற இணையத்தளத்தில் இதனை இன்றும் பார்வையிடலாம்.

வல்வை நகரசபை மண்டபத்தில் cinec கல்வி நிறுவனமும் vaiswa வும் சேர்ந்து நடத்திய கருத்தரங்கத்தில் இது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தியிருந்தோம். மாணவர்களிடையே தனிப்பட்டமுறையில் பரப்புரைகளை ஏற்படுத்தினோம். ஒரே ஒரு மாணவர் மாத்திரம் முன்வந்தார். அது பாலேந்திரன் ஸ்ரீகரன் என்பவரே இவரது கல்வித்தகைமைகள் வயதெல்லை யாவும் பொருத்தமாயிருந்தன. இவர் 2011இல் உள்வாங்கல் பரீட்சைக்குத் தோற்றினார். குறுகிய காலமாக இருந்தபடியால் இவரை தயார்படுத்த முடியவில்லை. எனவே முதல் பரீட்சையில் இவர் சித்தியெய்தவில்லை. மனச்சோர்வுற்று பிறதுறைகளிலும் மேற்படிப்பிலும் நாட்டம் கொண்டார். நாம் மீண்டும் வலியுறுத்தினோம். இவர் தந்தையார் கப்பலில் தொழில் புரிபவர். ஆகையால் அவரும் வற்புறுத்தவே 2012 ஆம் ஆண்டு உள்வாங்கல் பரீட்சைக்கு தோற்றினார். முதல் இரண்டு எழுத்துப்பரீட்சைகளிலும் (Written Exams) திறமையான சித்திகள் பெற்றார். அடுத்துவந்த 3 நேர்முகப்பரீட்சைகளிலும் (interviews Exam) சித்தியடைந்து Vaiswa வின் சிபாரிசுக் கடிதத்துடன் (Character Certificate) தற்போது BSc in Marine Engineering என்ற கற்கை நெறியினை மேற்கொண்டு வருகிறார். இக்காலகட்டத்தில் பயிலுனரிற்கான கற்கைநெறிகளாக Bsc in Nautical Studies எனவும் Bsc in Marine Engineering எனவும் வகைப்படுத்தியுள்ளார்கள். இக்கற்கை நெறிகளை கற்க மேலும் சில மாணவர்களை இனம் கண்டுள்ளோம். ஆனால் அவர்களின் வயதெல்லைப் பிரச்சினையால் சாதாரண மாலுமிகளாக எமது சிபாரிசினால் தொழில்வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்துள்ளோம். இவர்கள் 36 மாத கால சேவையின் பின் இக்கற்கைநெறிகளை கற்று படிப்படியாக உயர்பதவிகளையடைவார்கள் என திடமாக நம்புகிறோம்.

**குறிப்பு**

**கற்கை நெறிகளுக்கான தகைமைகள் பற்றிய விபரம் பிறிதொரு பக்கத்தில் தரப்பட்டுள்ளது.**

Cadet officer கற்கை நெறியில் நாம் இன்னொரு இளைஞனை இனங்கண்டு அவரையும் எமது உதவிகளுடனும் அனுசரணையுடனும் CINEC Campus இல் Deck Cadet கற்கை நெறிக்குள் (Bsc) உள்வாங்கக்கூடியதாக இருந்தது. அவர் வேறு யாரும் அல்ல அனுபவம் வாய்ந்த மாலுமியான **யோகேஸ்வரராஜா** அவர்களின் மகனும் deck cadet கற்கை நெறியில் சித்தியெய்தி தற்பொழுது சிறந்த officer ஆக தொழில் புரியும் **வினோத்** என்பவரின் சகோதரருமான **வசந்தன்** ஆகும். இவ்விரு சகோதரர்களும் இத்துறையில் சிறந்து விளங்குவதுடன் ஏனைய இளைஞர்களுக்கும் முன்னோடி களாகவும் விளங்க எமது வாழ்த்துக்கள்.

**வேலை வாய்ப்பு**

வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தின் கொள்கையானது சர்வதேச கடல் சார்பு தகைமைக் கேற்றவாறு (Internationals Maritime Standard) மாலுமிகளைப் பயிற்றுவித்து சர்வதேச கப்பல்களில் தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பதே, இதற்கமையவே எமது கற்கைநெறிகளை விரிவுபடுத்தியிருந்தோம். தொழில்வாய்ப்பு சம்பந்தமாக ஒரு சில கஷ்டங்களை எதிர் கொண்டுள் ளோம். முதலாவது பிரச்சினை இன்னமும் இலங்கைத்தமிழர்களான மாலுமிகள், கப்பல்கள் ஐரோப்பிய அமெரிக்கத்துறைமுகங்களிற்கு போனதும் அரசியல் தஞ்சம் கோரி ஓடிவிடுவார்கள் என்ற மாயை உள்ளது. இதற்காக அவர்கள் ஆட்பிணை மட்டுமல்லாது பெரும்தொகையான பணப்பிணையும் (CashBond) கோருகிறார்கள். இதனால் எமது சங்கத்தின் சிபாரிசிற்கமைய **கப்டன் N.கலைநேசன்** அவர்களின் வேண்டுகோளின்படி, தான் தொழில்புரியும் Ceyline என்ற Companyக்கு அனுபவமுள்ள வர்களும், எமது கற்கைநெறிகளுக்கு ஒழுங்காக சமூகமளித்தவர்களும் என்ற அடிப்படையில் 04 பேரை அறிமுகப்படுத்தியிருந்தோம். இம் முயற்சியில் நாம் இடைவிடாது ஈடுபட்டு வருகிறோம். இவர்களில் இருவர் தமது பழைய முகவரின் அழைப்பின் பெயரில் சென்று கப்பலில் போக, பல மாதங்கள் பொறுமையுடன் காத்திருந்த மற்ற இருவரும் வாய்ப்பை பெற்று தற்போது தொழில்புரிந்து வருகிறார்கள். தொடர்ந்து பலரை அறிமுகப்படுத்தவுள்ளோம். (இது 2012 வரையில் மட்டும் )

அடுத்த பாரிய பிரச்சினை என்னவென்றால் புதிதாக மாலுமிச் சான்றிதழ் (C.D.C) பெற்றவர்களின் விண்ணப்பங்கள் சேவையின்மை காரணமாக நிராகரிக்கப்பட்டன. இதனால் இவர்களில் சிலருக்கு மத்தியகிழக்கில் எண்ணை விநியோக கப்பல் கம்பனிகளின் முகவர்கள் மூலம் முக்கியமாக (LINC Trading Shipping Co. - White Horse Travels) உரிமையாளர் **திரு.P.அருள்குமரன்** போன்றோர் மூலம் ஒரு சிலரிற்கு வேலை வாய்ப்**புக்களை** பெற்றுக்கொடுத்துள்ளோம். புதிய மாலுமி சான்றிதழ் வைத்திருப்பவர்கள் (Fresh CDC Holders) பல ஆயிரக்கணக்கான ரூபா செலவழித்து புதிதாக CDC எடுத்தவர்கள் பற்றி **கப்டன் N.கலைநேசன்,** Ceyline மனிதவள முகாமையாளருடன் (Crew

Manager) விரிவாகக் கலந்துரையாடியுள்ளார். முழு இலங்கையிலும் வருடா வருடம் 750 இற்கும் மேற்பட்டோர் கற்கைநெறிகளின் பின்பு மாலுமி சான்றிதழ் பெற்று (CDC) வெளியேறுகிறார்கள். **இதனால் தமது முகாமைத்துவமும் (Management) அரசாங்கத்துடன் தீவிர ஆலோசனை நடாத்தி வருகின்றதென்றும் விரைவில் சுமூகமான திட்டமொன்று தயாராகி விடுமென்றும் அப்போது இவர்களை உள்ளீர்ப்பதாகவும் உறுதியளித்துள்ளார்கள்.** எனவும் அறிவித்துள்ளார். **சர்வதேசமட்டத்தில் சான்றிதழ்பெற்ற உத்தியோகத்தர்களிற்கு (Certificate Officer) இன்னமும் தட்டுப்பாடுள்ளது.** கற்கைநெறிகளை கற்பதற்கான தகைமை (Eligibility) இருந்தால் தயங்காது vaiswa வுடன் தொடர்பு கொள்ளுங்கள் மாலுமிகளாக உள்ளவர்கள் நலன்களை கவனிக்கவே Vaiswa ஆரம்பிக்கப்பட்டது. இப்போது அதன் இரு வருடகள் பூர்த்தியாகியுள்ளது. இக்கால எல்லைக்குள் எம்மால் முடிந்தளவு கணிசமான சேவைகள் செய்துள்ளோம். வல்வெட்டித்துறையை சொந்த மண்ணாகக் கொண்ட **திரு.T.மணிவாசகர்** அவர்கள் கப்பற்றொழிலில் ஒரு சக்திவாய்ந்த தொழிலதிபராகவும் முகவராகவும் திகழ்ந்தவர். தற்பொழுது மலேசியாவில் வசித்து வருகிறார். இவர் எமது இளைஞர்களுக்கு வழிகாட்டியாகவும் சர்வதேசக் கப்பல்களில் பல நூற்றுக்கணக்கான வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தியும் வல்வை மண்ணின் பிரமுகர்களில் ஒருவராக இருந்து வருகிறார். எமது Vaiswa என்னும் மாலுமிகள் நலன்புரிச் சங்கம் அவருடன் தொடர்புகளை ஏற்படுத்தியுள்ளது. எங்கள் வேண்டு கோள்களையும் படித்த இளைஞர்களின் பரிதாப நிலையையும் உணர்ந்து சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் உள்ள முகவர்களுடன் தொடர்பு கொண்டதாகவும் 2013/2014களில் மிக இலகுவான நடைமுறைகளுடன் எம்மால் சிபாரிசு செய்யப்படுபவர்களுக்கு வேலை வாய்ப்புக்களையும் Sea Service Training ஐயும் பெற்றுத்தர முழு முயற்சி செய்வதாக உறுதியளித்துள்ளார்.

இத்துடன் எமது சங்கத்தையும் (Vaiswa Agency) ஒரு முகவர் நிலையமாக பதிவுசெய்வதற்கான முயற்சிகளையும் நாம் செய்து வருகிறோம். இதன் முதற்படியாக எமது சங்கத்தினை ஒரு வருட பூர்த்தியுடன் பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் எம்மை பதிவு செய்துள்ளோம். எதிர்காலத்தில் எமது சேவைகளும் முயற்சிகளும் வெற்றிபெற உங்கள் ஆசிகளை வேண்டி நிற்கிறோம்.

**பின்வரும் தலைப்புக்களில் எமது சங்கத்தினால் துண்டுப்பிரசுரங்களும், கடிதங்களும் விநயோகிக்கப்பட்டு நடவடிக்கைகள் விஸ்தரிக்கப்பட்டுள்ளன.**

| திகதி | தலைப்பு | பொருளடக்கம் |
|---|---|---|
| March 2013 | அன்பும் கருணையும் கொண்ட வல்வை மண் நலன் விரும்பிகளே | முத்துமாரி அம்மன் திருவிழாக் காண வந்த வெளிநாடுகளில் வசிப்பவர்களை எமது சங்க செயற்பாடுகள் பற்றி அறிய வைத்தமை. |
| 28/4/2012 | வல்வை இளைஞர்களுக்காக நவீன முறைகளில் கப்பல்துறை சார் கல்வி | Capt. Baskaran, Capt. Vaithiyakumar ஆகியோர்களால் Projetor மூலமான விளக்கங்கள்ள் |
| 10/10/2013 | இறுதி வாய்ப்பு (Final Chance) | CINEC - Jaffna Campus ல் சேர்வதற்கான அறிவுறுத்தலகள் |
| 7/02/2013 | கடலோடிகளாகவும் கப்பலோட்டிகளா கவும் வல்வை மண்ணின் பாரம்பரியத் தை காப்போம், வளர்ப்போம். | இணையத்தளங்களுடாக விசேடமாக புலப்பெயர் வாழ்மக்களுக்கான எமது சங்கத்தின் நோக்கம். எதிர்காலத்திட்டம் என்பன போன்ற விளக்கங்கள். |
| 14/3/2013 | Vaiswa வின் அபார முயற்சியால், யாழ்மண்ணில் மாலுமிகளிற்கான கற்கை நெறிகள் ஆரம்பம். | மருதனார்மடத்தில் எமது அனுசரணையுடன் CINEC -Campus ஆரம்பித்து வைக்கப்பட்டமை பற்றிய விழிப்புணர்வு (இணையதளங்கள் ஊடாக தகவல்கள் வெளிப்படுத்தப்படுள்ளன.) |
| March 2013 | கப்பலில் வேலை வாய்ப்புக்கள். | உள்ளூர் பத்திரிகைகள் வாயிலாக கப்பல் துறையில் தொழில் வாய்ப்புக்கள் சம்பந்தமாகவும் உழைக்க கூடிய சம்பளங்கள் பற்றிய விபரங்கள் கொண்டதாகவும் தலைவர் திரு.கா. ரஞ்சனதாஸ் அவர்களால் எழுதப்பட்ட 5 பக்கங்கள் கொண்ட கட்டுரை |
| 27/05/2013 | கலந்துரையாடலும் ஒன்றுகூடலும் Discussiom and get together | வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களையும் இங்கிருக்கும் நலன் விருமபிகளையும் உள்வாங்கி 28.04.2013 ல் நடாத்தப்பட்ட ஒன்றுகூடலின் நிகழ்ச்சித் தொகுப்பு (இணையதளங்களூடாக வெளிப்படுத்தப்பட்டது) |
| 7/07/2013 | கப்பல்துறை சார் கற்கை நெறிகளுக்கான -சலுகைகள் | G.C.E(O/L) பரீட்சையில் சித்தியடையாவிட் டாலும் பரீட்சைக்கு தோற்றியிருந்தாலே(C.D.C) கற்கை நெறிகளை மேற்கொள்ளலாம். இது வடகிழக்கு மாகாண இளைஞர்களுக்கான சலுகை |
| 10/10/2012<br>16/10/2013 | மின் பொறியியல் சார் கற்கை நெறிகள் | E.T.O மற்றும் E.T.R கற்கை நெறிகள் சம்பந்தமான விளக்கங்கள் |
| 01/11/2013 | Vaiswa விற்கு கனடாவில் ஒரு கன்னிக்கிளை | U.Kல் வசிக்கும் திரு.தா.சண்முகதாஸ் அவர்கள் கனடாவுக்கு விஜயம் செய்த பொழுது அங்கு திரு.S.கலிங்கராஜன் அவர்கள் முயற்சியால் எமது சங்கத்தின் ஒரு கிளை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதில் பல நலன் விரும்பிகள் கலந்து சிறப்பித்ததுட்ன ரூபா 271,595.50 நிதியையும் எமக்கு அனுப்பி வைத்தனர். இதற்கான நன்றிக்கடிதம் இணையத்தளங்கள் ஊடாக வெளியிடப்பட்டது. |

| | | |
|---|---|---|
| January 2013 | Letter of appreciation to Mr.T.Manivasakar | 29.12.2012 ல் நடைபெற்ற எமது 2வது பொதுக் கூட்டத்தில் திரு.T.மணிவாசகர் அவர்கள் வல்வை மாலுமிகள் சமூகத்திற்கு ஆற்றிய சேவைகள் பற்றிப் பாராட்டில் பேசப்பட்டன. அதற்கான ஒரு கடிதம் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு அவருக்கு அனுப்பி வைக்கப்பட்டதுடன் இணையத்தளங்கள் ஊடாகவும் வெளியிடப்பட்டன. |

# 3 வது ஆண்டில்.............

வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கமானது தனது 3வது ஆண்டில் காலடி எடுத்து வைப்பதில் பெருமையடைகிறது. இச் சங்கம் ஆரம்பத்திலிருந்து சில நாட்களுள் எம் மீது கண்காணிப்பும் கெடுபிடிகளுக்கும் இருந்ததோடு ஒரு சில மூத்த உறுப்பினர்கள் தீவிர விசாரணைக்கும் உட்படுத்தப் பட்டுள்ளார்கள் என்பதை தற்போது வெளிப்படையாக சொல்லியே ஆக வேண்டும். இச்சங்கம் தடைசெய்யப்படலாம் என்ற அச்ச உணர்வும் இருந்ததென்பதை மறுக்க முடியாது. எனவே இச்சங்க நடவடிக்கைகளை மட்டுப்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டோம்.

இதனால் புலம்பெயர் முன்னாள் மாலுமிகளுடனான கருத்துப்பரிமாற்றங்களையும் தவிர்க்க வேண்டியதாயிருந்தது. இச்சவால்கள் மத்தியிலும் 3வது ஆண்டில் காலடி வைப்பது வியப்பிற்குரியது என்பதில் ஐயமில்லை. வல்வை மண்ணிற்கும் கப்பற்றுறைக்கும் இறுக்கமான தொழில் சார் உறவுமுறை ஒன்றுள்ளது என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை. எம் மண்ணில் அருகிப்போய் வரும் இத்துறையை மீளவும் கட்டியெழுப்புவதில் இச்சங்கம் மிகவும் உறுதியாகவே உள்ளது. இந்நோக்கை யடைவது இலகுவான தொன்றல்ல என்பதும் எமக்குத்தெரியும். இருந்தும் எம் பாதையில் நாம் முன்னேறி வருகின்றோம்.

**நடப்பாண்டிற்கான நிர்வாகசபை (2013 ற்கானது)**

29.12.2012இல் இடம் பெற்ற பொதுக்கூட்டத்தில் நிர்வாக சபைக்கு தெரிவானோர் விபரம்.

| | |
|---|---|
| தலைவர் | திரு. காத்தாமுத்து றஞ்சனதாஸ் |
| உப தலைவர் | திரு. பொன்னம்பலம் சிவானந்தம் |
| செயலாளர் | திரு. பூபால கிருஷ்ணசாமி அகமணிதேவர் |
| உப செயலாளர் | திரு. இரத்தினசாமி சண்முகாஸ் |
| பொருளாளர் | திரு. துரைசாமி சத்திவேல் |
| நிர்வாக சபை உறுப்பினர்கள் | திரு. இராமநாததாஸன் இராஜேந்திரா |
| | திரு. பாலசுப்பிரமணியம் மீனாட்சி சுந்தரம் |
| | திரு. பொன்னம்பலம் சிவஞானசுந்தரம் |
| | திரு. சங்கர் கிருசாந் |
| சர்வதேச இணைப்பாளர் | திரு. நடராசா சிவரெத்தினம் |

| | |
|---|---|
| **கணக்காய்வாளர்** | **திரு. ஆறுமுகசாமி நாகலிங்கம்** |

**மாலுமிகள் பயிற்சிக்கல்லூரி (NAUTICAL & ENGINEERING COLLEGE)**

இக்கல்லூரியொன்றை நிறுவுவதே எமது தூர நோக்கு (Our Vision) களில் ஒன்றாகவுள்ளது. இதற்கு அதிக நிதி, அரச அங்கீகாரத்தை பெறுவதற்கான தகுதியை அடைதல், உரிய வழங்கல் மற்றும் பயனாளிகளை இணைத்தல் போன்ற விடயங்கள் தேவைப்படுமாகையால் தற்போது இத்திட்டத்தை பிற்போட்டுள்ளோம். இருந்தும் எமது மாலுமிகளிற்கான கற்கை நெறிகளை அவ்வப்போது மேற்கொண்டு வருகிறோம்.

கொழும்பு சர்வதேச கப்பற்றுறை பொறியியல் கல்லூரி (COLOMBO INTERNATIONAL NAUTICAL & ENGINEERING COLLEGE – CINEC ) மருதனார்மடத்திலுள்ள யாழ் கிளையினை ஆரம்பிப்பதற்கு இச்சங்கத்தின் (Vaiswa) தூண்டுதலும் ஒரு காரணம். தற்போது சுமார் 100 பேர் வரை கற்று சித்தியடைந்து மாலுமிகள் சான்றிதழ்களை (C.D.C) இக்கிளை மூலம் பெற்றுள்ளார்கள். இக்கல்வி நிறுவனம், சந்தைப்படுத்துபவர்களாக (MARKETING SOURCE) எம்மை (Vaiswa வை) அங்கீகரத்துள்ளது மட்டுமல்லாமல் எமது சங்கத்தின் தலைவர் **திரு.கா.ரஞ்சனதாஸ்** அவர்களை வருகை தரு விரிவுரை யாளரகாக (Visiting lecturer) நியமித்து கௌரவப்படுத்தியுள்ளார்கள் எதிர்காலத்தில் மேலும் சில விரிவுரையாளை ஈடுபடுத்தும் நடவடிக்கையிலும் CINEC ஈடுபட்டுள்ளது.

நிதி வளம், அனுபவம், அரச அங்கீகாரம் போன்வற்றை கொண்ட CINEC குடன் மனிதவளம் கொண்ட Vaiswa இணைந்து செயற்படுவது விவேகமானது என நாம் நம்புகிறோம். சமீபத்தில் கூட கொழும்பு மாலபே campus இல் புதிய கற்கை நெறியொன்று அதாவது மின்தொழில் நுட்ப தராதரம் (ELECTRO Technical RATING-E.T.R) ஆரம்பிக்கப்படுள்ளது. அதற்கு கணிசமான மாணவர்களை எமது பகுதியிலிருந்து வழங்கியுள்ளோம்.

(campus பிண்ணணியில் எடுக்கப்பட்ட இவர்களது படம் பிறிதொருபக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

**கருத்தரங்கம் (SEMINAR)**

**சித்திரை மாத ஒன்று கூடலும் கருத்தரங்கும்**

புலம்பெயர் நாடுகளிலிருந்து அம்மன் கோவில் திருவிழாக்களிற்கு வருகை தந்திருந்த எனதூர் அபிமானிகளுக்கும் முன்னாள் மாலுமிகளுக்கும் ஏனைய நலன்விரும்பிகளுக்குமான ஒன்று கூடலும் கருத்தரங்கமும் 28.04.2013 அன்று (DISCUSSION AND GET-TOGETHER) இடம்பெற்றது. இதில் எட்டப்பட்ட சில தீர்மானங்கள் வருமாறு.

01) ஏற்கனவே வலிந்துதவும் சங்கமாக (VOLUNTARY ORGANIZATION) இவ்வமைப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிர்கால மாலுமிகளின் நன்மை கருதி, இதையொரு சட்டபூர்வமாக மாலுமிகளை அனுப்பும் (CREW AGENT) மாலுமிகள் முகவராக மாற்றியமைத்தல்.

02) இதற்கென சங்க அங்கத்தவர்கள், உள்ளூர் நலன் விரும்பிகள், வெளிநாட்டில் வதிபவர்கள், தற்போது கப்பலில் உயர்பதவிகள் வகிப்பவர்கள் என்போர் அடங்கிய ஒரு பணிப்பாளர் சபையை (BOARD OF DIRECTORS) ஐ உருவாக்குதல்.

03) எமது சங்கத்திற்கென ஓர் இணையத்தளத்தை உருவாக்குதல் (இப்போ ஆரம்ப நடவடிக்கையாக www. valvai malumikal.com என்ற பெயரில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.)

04) எல்லாவற்றிற்கும் மேலாக சங்கத்தின் வெளிப்படைத்தன்மையை கடைப்பிடிக்கும் நோக்கில் (TRANSPARANCY) சகலரிடமும் அபிப்பிராயங்களை கோரல். (இதன்படி எம்மிடமுள்ள சுமார் 60 முன்னாள் மற்றும் தற்போதைய மாலுமிகளது மின்னஞ்சல் முகவரிகளினூடாக எமது தீர்மானங்களை தெரியப்படுத்தியிருந்தோம்.)

05) கூட்டுறவு முறையில் பதிவு செய்தல் செலவு குறைவாகவும் பங்குதாரர்களை சேர்ப்பது இலகுவானதாகவும் இருக்குமென்பதால் கூட்டுறவு அதிகாரிகள் சிலருடன் ஆலோசனைகள் நடாத்தியுள்ளோம். ஆனால் நாம் வலிந்துதவு சங்கமாக செயற்பட்டாவாறே எம்மை நேரடியாக கப்பல் முகவராக (SHIPPING AGENT) ஆக பதிவு செய்யலாம் எனவும் அபிப்பிராயங்கள் நிலவுவதால் சரியான வழியை தேர்ந்தெடுக்கும் நடவடிககைகளில் ஈடுபட்டுள்ளோம். இது விடயமாக Ministry of Shipping உடன் எனும் கடிதத்தொடர்புகளை மேற்கொண்டுள்ளோம்

**கனடாவில் ஒரு வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கக் கிளை**

ஐக்கிய இராச்சியத்தில் (U.K) வதிபவரும் கப்பலில் நெடுங்காலமாக 3வது அதிகாரியாக கடமைபுரிந்தவரும், அன்றைய காலத்தில் கப்பலில் பலரிற்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுத்த வருமான **திரு T. சண்முகதாஸ்** அவர்கள் தனது சமீபத்திய கனடா விஜயத்தின் போது கனடாவில் வதியும் முன்னாள் மாலுமியான **திரு. S. கலிங்கராஜனுடன்** இணைந்து கலந்துரையாடல் ஒன்றை முன்னாள் மாலுமிகள் மத்தியில் செப்டம்பர் 2013 ஏற்பாடு செய்தார். எமது சங்கத்தின் செயற்பாடுகளையும் கொள்கைகளையும் இந்நிகழ்வில் இவர்கள் விபரித்திருந்தனர். இதன் மூலம் கணிசமான நிதி சேகரித்தும் அனுப்பியுள்ளார்கள். (ரூபா 271 595/=) இச்செயல் தற்போதய கால கட்டத்தில் எமக்கு வலுவூட்டும் ஒரு நடவடிக்கையாகும். ஏனைய நாடுகளிலும் இதே போல் கிளை களை ஏற்படுத்த நலன்விரும்பிகள் முன்வருவார்களென இச்சங்கம் எதிர்பார்க்கிறது.

**இச்சங்கத்தின் புத்தக வெளியீடு**

வல்வையின் கப்பற்றுறையில் சரித்திரம் படைத்த அன்னபூரணி என்ற கப்பலின் சரித்திரம் பற்றி அவ்வப்போது சில நூல்கள் வெளிவந்த போதும் தற்போதய சமுதாயத்திலுள்ள பல இளைஞர்கள் இதுபற்றியும் கப்பற்றுறையில் எமது முன்னோர்களின் ஆளுமைகள் பற்றியும் அறியாமலிருப்பது

மிகவும் கவலைக்குரிய விடயமாகும். இதனை நிவர்த்தி செய்யும் நோக்கில் இதுவரை காலமும் வெளி வந்த நூல்களின் உள்ளடக்கங்களையும் தொகுத்து சர்வதேச இணைப்பாளரான **திரு.ந.சிவரெத்தினம்** 1995 இல் அவரால் வெளியிடப்பட்ட ***"ஆழக்கடல் வென்றவர்கள்"*** என்ற நூலினை மீள்பதிப்புச் செய்து அதே தலைப்பில் நூல் ஒன்றை கடந்த ஆகஸ்ட் மாதம் வெளியிட்டார். இந்நிகழ்வை **வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கமும் வல்வை கலை கலாசார இலக்கியமன்றமும்** இணைந்து **இந்நிகழ்வை நடாத்தி வைத்தனர்.** இதற்கான நிதியுதவியின் பெரும் பகுதியை அவுஸ்ரேலியாவில் வாழும் **திரு அம்பலவாணரின்** மகனும் கப்பலில் Chief Engineer ஆக தொழில் புரிபவருமாகிய **திரு. ராஜாசேகரம்** (தம்பிக்குட்டி) அவர்கள் அன்பளிப்பு செய்திருந்தார். இவர்களுக்கு எமது சங்கம் நன்றிகளை தெரிவித்து கொள்கின்றது.

இந்த நூலை வாசித்த பத்திரிகையாளர்கள், பெறுமதியான வரலாற்றுத் தகவல்கள் பல அதில் உள்ளடக்கப்படிருக்கிறதென நேரில் தெரிவித்திருந்ததுடன் சாதகமான விமர்சனங்களையும் எழுதியுள்ளனர். சாதனை படைத்த முன்னாள் மாலுமிகளின் துணிச்சலை விபரிக்கும் இந்நூலை வாசிக்கும் எம் இளைஞர்கள் மத்தியில் இது ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தும் என்பதில் சிறிதளவேனும் ஐயமில்லை.

***(குறைந்த விலையில் உள்ள இந்நூலை வல்வெட்டித்துறைச்சந்தியில் அமைந்துள்ள "கலைச்சோலை" புத்தக சாலையில் பெற்றுக்கொள்ளலாம்)***

கடந்த ஆண்டு முற்பகுதியில் இந்நூலாசிரியர் ***"கப்பலில் தொழில் வாய்ப்புக்கள்"*** என்ற தலைப்பில் தொடர் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தார். என்பதை ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

இக் கட்டுரையானது யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் 3 உள்ளூர் பத்திரிகைகளில் பிரசுரமாகியிருந்ததும் தெரிந்ததே. இதனால் குடாநாட்டின் பல பகுதிகளிலிருந்தும் இளைஞர்களை யாழ் CINEC கிளை உள்வாங்கி கப்பல் சார் கற்கை நெறிகளை போதிக்கவும் சான்றிதழ்களை வழங்கவும் வாய்ப்புக்கள் ஏற்பட்டன.

### தொழில் வாய்ப்புக்கள்

மத்திய கிழக்கில் உள்ள எண்ணை விநியோகக்கப்பல்களில் தொழில் புரியும் திறமை வாய்ந்த மாலுமிகளை சர்வதேச கப்பல்களில் தொழில் வாய்ப்பை பெற்றக்கொடுக்கும் முயற்சியில் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கத்தின் சிபாரிசுகளின் அடிப்படையில் **கப்டன் N. கலைநேசன்** அவர்கள் ,தொடர்ச்சியாக தான் தொழில் புரியும் CEYLINE SHIPING COMPANY யில் மேலும் இருவரிற்கு இவ்வாண்டும் (2013இலிலும் ) தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுத்துள்ளார். **கப்டன் P. நீதிராஜா** அவர்களும், தான் தொழில் புரிந்த கப்பலில் புதிதாக மாலுமிச் சான்றிதழ் பெற்ற இருவரிற்கு (FRESH

C.D.C HOLDERS) தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுத்துள்ளார். அதே போல் **கப்டன் A.ஆதவன்,** தான் தொழில் புரியும் P.I.L என்ற COMPANY யில் எமது சிபாரிசுகளின் அடிப்படையில் வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தந்துள்ளார். சமீபத்தில் இதே பாதையில் **திரு.கே.பஞ்சலிங்கம்** (போசன்) அவர்களும் இரண்டு புதிய C.D.C Holdres ஐ அனுப்பி வைத்துள்ளார். அதுமட்டுமல்ல **கப்டன் S.செல்வச்சந்திரனும் Sea Service** அனுபவம் அற்ற ஒரு புதிய மாலுமியை அனுப்பி வைத்துள்ளார்.

இவை கடந்த சித்திரை மாத ஒன்று கூடலில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் ஒன்றான கப்டனாக தொழில் புரியும் ஒவ்வொரும் மட்டுமல்லாது வல்வை மக்களின் நலன்விரும்பிகள் யாவரும் தாம் தொழில் புரியும் கம்பெனிகளில் குறைந்தது இருவரிற்கு தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொடுக்க வேண்டும் எனும் அடிப்படையிலானது. இதே போல ஏனைய மாலுமிகளும் உதவ முன்வருவார்களென Vaiswa எதிர்பார்கிறது.

## இணையத்தளம் (WEB-SITE)

VAISWA சர்வதேச ரீதியில் தன்னை அறிமுகப்படுத்த ஓர் இணையத்தளம் இன்றியமையாதது. சித்திரை மாத ஒன்று கூடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி ஓர் இணையத்தளத்தை அண்மையில் ஆரம்பித்துள்ளோம். www.valvai malumikal.com என்ற இணையத்தளமே அது. இன்னும் இது சரியாக இயங்கி ஆர்வலர்களுக்கான தகவல்களை தரும் நிலையில் இல்லாத போதும் இத்தளம் விரைவில் பூரணப்படுத்தப்படும். மூன்றாவது ஆண்டு பொது கூட்ட நிகழ்வின் போது இது வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்படும் Launching என எதிர்பார்க்கப்படுகிறது.

### மணியண்ணாவின் சிந்தனை

வல்வை மாலுமிகள் சங்கத்திற்கு பல வழிகளில் ஆலோசனை வழங்கிவரும் கப்பற்றுறையில் தந்தையென அறியப்படுபவரும் தற்போது மலேசியாவில் வசித்து வருபவருமாகிய **திரு. தமோதரம் பிள்ளை மணிவாசகர்** அவர்கள் வல்வையின் வளர்ச்சி கருதி பெறுமதி மிக்க ஓர் எண்ணக்கருத்தினை முன்வைத்துள்ளார். அது அண்மையில் WWW.vavettiturai.org என்னும் இணையத்தளத்தில் அதன் நிர்வாகி **கப்டன் அ.ஆதவன்** அவரின் அறிமுகவுரையுடன் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இப்படியான சிந்தனைகளை Vaiswa வரவேற்கிறது. இதனை நடைமுறைபடுத்த தேவையான ஆளுமை உள்ளவவர்களின் பங்களிப்பு ஒரு பெரும் பற்றாக்குறையாக உள்ளது. எனவே வல்வையின் வளர்ச்சியில் ஆக்கபூர்வமான அக்கறையுள்ளவர்கள் துணிச்சலுடன் எமக்கு உதவ முன்வர வேண்டுமென Vaiswa விரும்புகிறது.

**ஒரு தந்தையின் துணிவுமிக்க செயல்**

நீண்ட காலமாக கப்பலில் 3 வது பொறியியலாளராக இருந்தவரும் தற்போது வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்க நிர்வாக சபை அங்கத்தவருமாகிய **திரு.நடராசா யோகேஸ்வரராசா** (கற்கண்டி) தனது இரு புதல்வர்களையும் அவர்கள் O/L ல் திறமை சித்தியடைந்தாலும் A/L படிக்கும் போது விளையாட்டுத்தன்மைகள் கொண்டவர்களாக இருப்பதை அவதானித்தார். தனது புதல்வர்கள் பல்கலைக் கழகத்திற்குப் புகமுடியாமல் போய்விடுமோ என மனதுள் எண்ணிய போதும் அதை சமாளிக்க துணிவுடன் சில முடிவுகளை எடுத்தார். அதன்படி தனது மூத்த புதல்வரை கப்பற்றுறையில் ஈடுபடுத்த முடிவு செய்தார். சாதாரண மாலுமியாகவல்ல ஆனால் பயிலுனர் உத்தியோகத்தராக (CADET OFFICER) ஆக, அத்துறையில் ஒருவர் சேருவதென்பது எளிதல்ல. இத்துறைக்கு கொழும்பு மாபேயிலுள்ள CINEC கல்லூரியே மாணவர்களை உள்வாங்கிக் கொண்டிருந்தது. இதற்கு பல கடுமையான எழுத்துப்பரீட்சைகள் (Written Exams) நேர்முகப்பரீட்சைகள் (Interviews) இதைவிட கடுமையான சிபாரிசுகள் (HIGH RECOMANDTION) என்பன வற்றை சமாளிக்க வேண்டும். இத்தனைக்கும் இவர் ஒரு சிறந்த கல்வியாளனுமல்ல, சரளமாக ஆங்கிலம் பேசுபவருமல்ல தனது மகனை பல கப்டன்மாரிடம் அனுப்பி அடிப்படைக் கற்கை நெறிகளை கற்பிக்க ஏற்பாடு செய்தார். CINEC லும் புகுந்து நேர்முகப்பரீட்சை வைப்பவர்களிடம் நட்பாகினார். இப்படியான பல தடைகளைத்தாண்டி தனது மூத்த மகனை உட்புகுத்துவதில் வெற்றி கண்டார். **திரு.வினோத்** எனும் இவர் தற்போது சிறந்த officer ஆக வெளிநாட்டுக்கப்பலில் பணிபுரிகின்றார்.

அதே போல் தனது இரண்டாவது மகனாகிய **வசந்தனையும்** Vaiswa வின் உதவியுடன் கற்கை நெறிகளை கற்பித்து ஆங்கில கணித அறிவை **கலாநிதி சபா இரஜேந்திரன்** மற்றும் **திரு ந. சிவரெத்தினம் என்பவர்கள்** மூலமும் கற்பித்து உட்புகுத்துவதில் வெற்றி கண்டார். இவரது துணிச்சல் மிகுந்த திட்டமிட்ட செயற்பாட்டினை ஒவ்வொரு பெற்றோரும் மேற்கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். இதற்கான ஆலோசனைகளை வழங்கவும் நாம் தயராக உள்ளோம்.

**திரு. வசந்தன்** officer cadet கற்கை நெறியில் Foundation Stage இல் சித்தியெய்தி தற்சமயம் Phase - one இல் கல்வியை தொடர்ந்த வண்ணம் உள்ளார்.

**இன்னொரு பெற்றோரின் விடாமுயற்சி**

இது எமது மண்ணைச் சேர்ந்த **திரு.பாலேந்திரன் ஸ்ரீகரன்** பற்றியது ஆகும். இவரைப்பற்றிய மேலதிக தகவல்கள் பக்கங்கள் 06, 07 களில் தரப்பட்டுள்ளன. **ஸ்ரீகரன்** அவர்களின் தந்தை மட்டுமல்ல தாயாரும் மிக ஆர்வத்துடன் மகனின் கற்கை நெறியை ஊக்கப்படுத்திய வண்ணம் உள்ளார்.

**திரு ஸ்ரீகரன்** Engine cadet கற்கை நெறியில் Foundation Level இல் சித்தியெய்தி Phase - one Course ஐ முடிக்கும் தறுவாயில் உள்ளார்.

# THE STUDENTS ASSISTED BY VAISWA PRESENTLY FOLLOWING (E.T.R )COURSE at COLOMBO CINEC CAMPUS




கடந்த 05.11.2013 இல் CINEC -MALABE யில் ஆரம்பிக்கப்பட்ட Electro Technical Rating (E.T.R) கற்கை நெறிக்கு தெரிவாகி தற்போழுது கற்கை நெறிகளை மேற்கொண்டுவரும் மாணவர்களின் ஒரு பகுதியினர் Campus கட்டட முன்றலில் காணப்படுகின்றனர்.

இவர்களுக்கான தூண்டுதல்களைக் கொடுத்ததுடன் இவர்களை தொடர்ந்தும் ஊக்குவித்து வருவதில் வல்வை மாலுமிகள் நலன்புரிச்சங்கமாகிய VAISWA மகிழ்ச்சியடைகிறது.

இவர்கள் இக்கற்கை நெறியை வெற்றிக் கரமாக நிறைவுசெய்து ஏனைய இளைஞர்களுக்கு முன்னோடிகளாகத் திகழ நாம் வாழ்த்துகின்றோம்.

### ENGINE CADET OFFICER COURSE



BALENTHIRAN - SRIHARAN (VALVETTITHURAI)

COMPLETED - FOUNDATION STAGE

FOLLOWING - MARINE ENGINEERING (Phase - I)

## DECK CADET OFFICER COURSE



YOGESWARARAJAH - VASANTHAN (VALVETITHURAI)

COMPLETED - FOUNDATION STAGE - MARCH - 2013

FOLLOWING - PHASE - ONE

***VAISWA WISHES BOTH OF THEM A BRIGHT FUTURE***

# CADET OFFICERS

இதற்கு சாதாரண C.D.C எடுப்பவர்களை விட கல்வித்தகைமைகள் அதிகமாக தேவைப்படும். இதில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று Engine side மற்றது Deck side

Engine side கற்கை நெறிகளை மேற்கொள்பவர்கள் இறுதியில் Marine Engineer ஆகவும் Deck side கற்கை நெறிகளை தொடர்பவர்கள் இறுதியில் **Captain** ஆகவும் பதவி உயர்வு**கள்** பெறலாம்.

இவை Foundation Level ல் ஆரம்பித்து Phase I, Phase II, Phase III, Class – 3 Class – 2, Class – 1 என்ற படிகளைத் தாண்டி Bsc - Marine Engineer, (Chief Engineer) மற்றும் BSc - Maritinu Science (CAPTAIN) என்ற உயரிய பட்டப்படிப்புக்களில் முடிவுறும்.

Cadet Officer - Engineering க்கான Foundation கற்கை நெறி பற்றி.........

| | | | |
|---|---|---|---|
| 01. | Duration | – | 06 Months |
| | காலம் | – | 06 மாதங்கள் |
| 02. | Age | – | Less than 21 year |
| | வயது | – | 21 வயதிற்குள் |
| 03. | Educational Qualification | – | G.C.E.(O/L) - 6 Passes inducing Credits in English, Mathematics and Science |
| | கல்வித்தகைமைகள் | – | அத்துடன் G.C.E.(A/L) - பரீட்சைக்கு Maths or Biology பாடத்தை எடுத்திருப்பவர்கள் மட்டுமே Foundation Course க்கு விண்ணப்பிக்கலாம் |

இதே போல் Deck Side கற்கை நெறிகளை மேற்கொள்பவர்களுக்கான Foundation கற்கை நெறிபற்றி......

| | | | |
|---|---|---|---|
| 01. | Duration | – | 06 Months |
| | காலம் | – | 06 மாதங்கள் |
| 02. | Age | – | Less than 20 years |
| | வயது | – | 20 வயதிற்குள் |
| 03. | Educational Qualification | – | G.C.E. (O/L) - 6 Passes inducing Credits in English, Mathematics and Science |
| | கல்வித்தகைமைகள் | – | அத்துடன் G.C.E.(A/L) - பரீட்சைக்கு Maths or Biology பாடத்தை எடுத்திருப்பவர்கள் மட்டுமே Foundation Course க்காக விண்ணப்பிக்கலாம். |

இந்த இரண்டு கற்கை நெறிகளைப் பற்றிய மேலதிக தகவல்கள் அட்டவணை வடிவத்தில் அடுத்த பக்கத்தில் தரப்படுகிறது.

OFFICER CADET
(BSc. Marine Engineering)

**INTRODUCTION**

Officer in charge of an engineering watch training programme is based upon the requirement of regulation III/I of the DTCW 1978 - annex manila amendments 2010. students who successfully complete the course are eligible to appear for the certificate of competency for "officer in charge of an engineering watch" examination conducted by administration. with further sea time and examinations, students will be able to obtain a BSc. in Marine Engineering awarded by the Dalian Maritime University in China, hopefully with UGC approval BSc in Marine Engineering.

**COURSE OUTLINE**

Phase I - 12 Months
*(10 Months at CINEC+2 Months training at Colombo Dock Yard)*

Phase II -12 Month *(at sea)*

Phase III -13 Months
*(8Months at ship yard +1/2 Month Automation Control +1/2 Month Electronics, 02 Weeks Simulator Training +4 Months Theory an advanced short courses)*

**DURATION**

-37 Months

**CAREER OPPORTUNITIES ON LAND FOR MARINE ENGINEERS**

- 5- Star Hotels
- Diesel Power Plants
- Large Factories
- Maritime College & Universities

**ENTRY REQUIREMENT**

- Age less than 22 years
- GCE A Levels - Passes in Combined Mathematics and Physics

or

- Passes in Biology, Physics and Chemistry

and

- GCE O Level - 6 Passes including Credits in English, Mathematics and Science

**FOUNDATION PROGRAMME**

**DURATION**

- 6 Months

**ENTRY REQUIREMENT**

- Age less than 21 years
- GCE O Level - 6 Passes including Credits in English, Mathematics and Science

(Only students who have sat for GCE -A/L examination in Maths or Biology stream are eligible to follow the Foundation Programme)

OFFICER CADET
(BSc. Marine Engineering)

**INTRODUCTION**

Officer in Charge of a Navigational Watch Training Program based upon the requirement of Regulation II/I of the STCV Students who successfully complete the course are eligible for the certificate of competency for "officer in Charge of Navigational Watch "Examination conducted by Administer further sed time and examinations, students will be able to BSc. in Marine Science award by the Dalian Maritime UGC China.

**COURSE OUTLINE**

| | | |
|---|---|---|
| Phase I | - | 05 Months |
| Phase II | - | 12 Months *(at sea)* |
| Phase III | - | 03 Months |
| Phase IV | - | 12 Months *(at sea)* |
| Phase V | - | 06 Months |

**DURATION**

-38 Months

**CAREER OPPORTUNITIES ON LAND FOR MARINE ENGINEERS**

- Shipping Managers - Ship Surveyors
- Ship Planners - Pilots
- Maritime Educators - Marine Superintended
- Habour Masters - Shipping Administrate
- Port State Controllers - Ship Brokers

**ENTRY REQUIREMENT**

- Age less than 22 years
- GCE A Levels - Passes in Combined Mathematics and Physics

or

- Passes in Biology, Physics and Chemistry

and

- GCE O Level - 6 Passes including Credits in English, Mathematics, Science.

**FOUNDATION PROGRAMME**

**DURATION**

6 Months

**ENTRY REQUIREMENT**

- Age less than 20 years
- GCE O Level - 6 Passes including Credits in English, Mathematics, Science

(Only students who have sat for GCE -A/L examination in Maths or Biology stream are eligible to follow the Foundation Programme)

**மேலும் சில தகவல்கள் இதோ…**

இவ்விரண்டு கற்கை நெறிகளையும் அதாவது officer cadet foundation level கற்காமல் நேரடியாக Phase I ஐ கற்பதற்கு G.C.E A/L Maths பிரிவில் Mathematic, Biology ,Physics பாடத்திலுமாக (02–S) அல்லது Bio பிரிவில் Biology, Physics என்பவற்றுடன் Chemistry ஆகிய பாடங்களில் (03–S) சித்திகள் பெற்றிருந்தால் அதற்குரிய தகுதியைப் பெறலாம்.

**வயதுப் பிரச்சினை**

G.C.E(O/L) உடன் Foundation Corse செய்வதற்கு தகுதியிருந்தும் 22 வயதிற்கு கூடியவர்களெனின் சாதராண C.D.C கற்கை நெறியை முடித்துக்கொண்டு கப்பலில் 36 மாதங்கள் A.B ஆக அல்லது Oiler Deck officer அல்லது Engineer Officer ஆகி அதன் பின்னர் Chief Engineer அல்லது Captain படிப்புக்களை மேற்கொள்ளலாம்.

**வேறு வேலை வாய்ப்புக்கள்**

Marine Engineer ஆக பட்டம் பெற்றவர்கள் கப்பல் வேலையிலிருந்து ஓய்வு பெற்றோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ தரையில் (Land ல்) வேலை செய்ய வேண்டிய நிலைமை ஏற்படின் பின்வரும் இடங்களில் / ஸ்தாபனங்களில் நிறைய வேலைவாய்ப்புக்கள் உண்டு.

01. 5 Star Hotels
02. Diesel Power Plant
03. Large Factories
04. Ship Repair Yard
05. Marine Educational Institutes
06. Lecturer in university முதலியன

இதே போல் Deck Side ல் Marne Science பட்டப்படிப்பு படித்தவர்கள் (Captains) களுக்கு வேலை வாய்ப்புக்கள் வருமாறு

01. Shipping Manager
02. Ship Surveyor
03. Ship Planer
04. Pilot
05. Marine Side Lecturer
06. Habour Master
07. Port State Controller
08. Ship Broker
09. Shipping Administrator
10. Marine Superintendent முதலியன

# Electro Technical Officers and Electro Technical Rating
## சர்வதேச ரீதியிலான புதிய தொழில் வாய்ப்புக்கள்

கப்பற்றுறைக்கான தொழில் வாய்ப்புக்கள் மிக அதிக வருவாய் கூடியதாக அதிகரித்து வரும் இக்கால கட்டத்தில் இதற்குரிய கல்வியினை பெறுவதற்கும் வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுக்க வேண்டிய கடப்பாடு பல நாடுகளிலும் அதிகரித்து வருவதனை காணக்ககூடியதாகவுள்ளது.

இன்றைய கால கட்டத்தில் STCW எனப்படும் சட்ட திட்டங்களுக்கமைய பல கல்வித்திட்டங்களை வகுத்து அதற்கேற்ப பல கற்கை நெறிகளை ஆரம்பித்து வைத்துள்ள எமது கப்பற்றுறை பயிற்சி நிறுவனமாகிய சிநேக் (CINEC) இந்த வருடம் நவம்பர் 5 ஆம் திகதி இரு முக்கிய கல்வி நெறிகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

இது பற்றி கப்பற்துறை பொறியியல் பீடத்தின் மின் நுண்தொழில் நுட்ப திணைக்களத்தினது பிரதம விரிவுரையாளரும் திணைக்களத்தின் பொறுப்பாளருமாகிய **திரு.கால்ரன் ஹரிஹரன்** எடுத்துரைக்கையில் (மேற்கண்டவாறு) தெரிவித்ததாவது

“நாம் அரச அனுமதியினை பெற்று ஏறத்தாழ பத்து கல்வி நெறிகளை அறிமுகப்படுத்தி யுள்ளோம். ஆரம்ப கட்டமாக கீழ் தரப்படும் இரண்டு கற்கை நெறிகள் கடந்த நவம்பர் மாதம் 5 ஆம் திகதி வெற்றிகரமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.”

01) Electro Technical Officer (E.T.O) - Phase I
பயிற்றுவிப்புக்காலம் 16 மாதங்கள்

02) Electro Technical Rating (E.T.R)
பயிற்றுவிப்புக் காலம் 06 மாதங்கள்

**இப் பயிற்சியின் இறுதிக்கட்டத்தில் தொழில் முறைப் பயிற்சியினை கப்பலில் பெற்றுக் கொள்வதற்கு தேவையான திட்டங்களை முன்னெடுக்கின்றோம். இதற்கு மிக முக்கியமாக ஆங்கில தொடர்பாடல் திறன் பெற்று ஆங்கிலத்தில் சரளமாக பேசக்கூடியவர்களுக்கு நேர்முகப் பரீட்சையில் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்புக்கள் மிக அதிகமாக காணப்படுகின்றது. அத்துடன் ஒழுக்கசீலர்களாக இருப்பதும் மிக முக்கியம்.**

# GENERAL- C.D.C COURSES

இது வர்த்தக கப்பல் துறை மாலுமிகளாவதற்கு (Seaman) தேவையான அடிப்படைக்கற்கை நெறிகளைப் பற்றியது. இதற்குரிய நுளைவுச் சான்றிதழ் C.D.C (CONTINUING DISCHARGING CERTIFICATE) என அழைக்கப்படுகிறது. இச்சான்றிதழ் இல்லாமல் கப்பலில் வேலை பார்க்கும் தகுதியை எவரும் பெறமுடியாது. இதில் பல பிரிவுகள் இருந்தபோதும் MOTOR MAN மற்றும் DECK RATING என்ற இரு பகுதிகளைப் பற்றிய சில தகவல்கள் வருமாறு

இக் கற்கைநெறிகளை பூர்த்தி செய்தவர்களுக்கு கப்பல் துறை அமைச்சினால் (MINISTRY OF SHIPPING) வழங்கப்படுவது தான் C.D.C சான்றிதளாகும். இவ்விரு கற்கை நெறிகளைப் பற்றிய சில தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

இந்த பாடநெறியை பூர்த்தி செய்பவர்கள், இறுதியில் வர்த்தக கப்பல்களில் சேவை செய்வதற்கு தேவையான கப்பற்றுறை அமைச்சினால் வழங்கப்படும் C.D.C அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்ள முடியும்.

**பயிற்சி நெறி உள்ளடக்கம்**

01. Nautical Knowledge
02. Practical Seamanship Theory
03. Seamanship Theory
04. Steering of the Vessel
05. Watch keeping
06. Maritime English

**பயிற்சி நெறி கால எல்லை**

முழுநேர பயிற்சி நெறி 03 மாதங்கள்

**தேவையான தகைமைகள்**

01. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.

02. கல்வித்தகைமை G.C.E. O/L (ஜி.சி.சி சா/ தரம் ) வரை கல்வித் தகைமை காணப்பட வேண்டும்.

குறிப்பு: வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கு சில விதிவிலக்குகள் உண்டு. இது பற்றி அறிய Vaiswa வுடன் தொடர்பு கொள்ளவும்.

**பாட நெறி கட்டணம்**

பாடநெறி கட்டணம் பகுதி பகுதியாக செலுத்த முடியும்.

## பொறியியற் துறை அலுவலகப் பொறுப்பாளர் பாட நெறி

## CDC Motorman (Marine Skilled Craftsman)

வர்த்தக கப்பற்றுறை சேவையில் பதவி அல்லது உள்நாட்டு வெளிநாட்டு வேலைவாய்ப்பிற்காக கப்பற்றுறை அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட பொறியியற்துறை பாடநெறி. இந்த பாடநெறி இறுதியில் வர்த்தக கப்பலில் சேவை செய்வதற்காக கப்பல்துறை அமைச்சினால் வழங்கப்படும் CDC அனுமதிச் சான்றிதழ் வழங்கப்படும்.

### பயிற்சி நெறி உள்ளடக்கம் – Course Content

01. Basic Environmental Protection
02. Emergency Procedures & Equipments
03. Watch keeping
04. Theory of General Fitting
05. Basic Environmental Protection
06. Emergency Procedures & Equipments
07. Watch keeping
08. English

### பயிற்சி நெறி கால எல்லை

முழுநேர பயிற்சி நெறி 3 மாதங்கள்

### தேவையான தகைமைகள்

01. 18 வயதிற்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
02. கல்வித்தகைமை G.C.E O/L ஜி.சீ.ஈ சா/ தரம் வரை கல்வித் தகைமை காணப்பட வேண்டும்.

### பாட நெறி கட்டணம்

பாடநெறி கட்டணம் பகுதி பகுதியாக செலுத்த முடியும்.

குறிப்பு: வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கு சில விதிவிலக்குகள் உண்டு. இது பற்றி அறிய Vaiswa வுடன் தொடர்பு கொள்ளவும்.

# ELECTRO TECHNICAL OFFICER (E.T.O)

## உள்வாங்கல் தகைமைகள்

வயது : 18 க்கு மேல்

காலம் : Electro technical officer (Full time 16 month)

| | | | |
|---|---|---|---|
| கல்வி | : ஜி.சி.சி சா/த(O/L) | கணிதம் | திறமைச்சித்தி(C) |
| | | விஞ்ஞானம் | திறமைச்சித்தி (C) |
| | | ஆங்கிலம் | திறமைச்சித்தி(C) |
| | | அத்துடன் A/L கணிதப் பிரிவில் (02-S) | |
| ஜி.சி.சி உ/த(A/L) | | கணிதம் | சாதாரணசித்தி(S) |
| | | பௌதிகவியல் | சாதாரணசித்தி (S) |

Bio பிரிவு ஆனாலும் Py கட்டயமாக ஒரு பாடமாக (ள) இருக்க வேண்டும்

Biology, Physics மற்றும் Chemistry என்பவற்றில் (03-S)

**மேலதிக தகைமை**

01. பொது அறிவு
02. கணணி அறிவு (Mocro soft wprd, excel)
03. ஆங்கில அறிவு (சாதாரணமாக கதைக்க பேச, எழுத தெரிந்திருக்க வேண்டும்.)

எந்த கற்கை நெறியாயினும் முழுநேர ஈடுபாடு தேவை. 5 நாட்கள் கல்லூரி கல்வி முழுமையான கல்வித்தரத்தினை தர போதாது என்பதால் மாலையிலும் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் கல்வி மீட்டல் பயிற்சிகிளில் ஈடுபடுதல் இன்றியமையாதது.

# Electro Technical Rating (E.T.R)

உள்வாங்கல் தகைமைகள்

வயது : 18 க்கு மேல்

காலம் : 06 மாதங்கள் (Full time - முழுநேரம்)

கல்வி : ஜி.சி.சி சா/த(O/L) கற்றிருத்தல்

**மேலதிக தகைமை**


01.பொது அறிவு

02.கணணி அறிவு (Microsoft word, Excel)

03.ஆங்கில அறிவு (சாதாரணமாக கதைக்க பேச, எழுத தெரிந்திருத்தல் வேண்டும்.)

எந்த கற்கை நெறியாயினும் முழுநேர ஈடுபாடு தேவை. 5 நாட்கள் கல்லூரி கல்வி முழுமையான கல்வித்தரத்தினை தர போதாது என்பதால் மாலையிலும் சனி, ஞாயிறு போன்ற விடுமுறை நாட்களிலும் கல்வி மீட்டல் பயிற்சிகளில் ஈடுபடுதல் இன்றியமையாதது.

# Path to Success @ CINEC




## Selection process Officer Cadet Training Programme

01.Screening of applications

02.Aptitude test *(English /General Knowledge, Science, Mathematics, National/ Word news)*

03.Interview by the Dean of Faculty

04.Interview by Faculty members

05.Interview by Group Managing Director

06.Medical Test

07.Physical Test

08.Final Selection

# VALVAI SEAMAN WELFARE ASSOCIATION

## வல்வை மாலுமிகள் நலன்புரிச் சங்கம்

October 2012 - November 2013 க்குட்பட்ட 2 வது ஆண்டிற்கான

**வரவு செலவு கணக்குத் தொகுப்பு**

| திகதி | விபரம் | வரவு | | செலவு | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| | **விசேட அன்பளிப்புக்கள் வங்கியில் வைப்புச் செய்யபட்டவை** | | | | |
| 04.03.2013 | திரு. P.சண்முகராஜா (2nd Officer) | 13000 | 00 | | |
| 04.04.2013 | திரு.ச.சுரேந்திரதாஸ் (London) | 41695 | 92 | | |
| 04.05.2013 | திரு.T.முரளிதரன் (பிரபல வல்வை நலன்விரும்பி) | 10000 | 00 | | |
| 08.10.2013 | vaiswa வின் கனடாக்கிளை | 271595 | 00 | | |
| 06.11.2013 | Marine Engineer திரு.A.இராஜசேகரம் (அவுஸ்ரேலியாவிலிருந்து புத்தக வெளியீட்டுக்கென) | 31500 | 00 | | |
| 06.11.2013 | 18.08.2013 இல் புத்தக வெளியீட்டு விழாவில் சேர்த்தது | 21300 | 00 | | |
| | **பொருளாளரிடம் பணமாக** | | | | |
| 18.02.2013 | திரு.C.றஞ்சனதாஸ் (Vaiswa த்தலைவர்) | 5000 | 00 | | |
| 20.02.2013 | திரு.V.கிருஷ்ணமூர்த்தி (Chief Officer) | 12000 | 00 | | |
| 06.11.2013 | திரு.R.இராஜேந்திரா (செயற்குழு உறுப்பினர் Vaiswa) | 6200 | 00 | | |
| | | 412290 | 92 | | |
| 30.11.2013 | வரையான சேமிப்பு வைப்பு க/கு வட்டி | 6761 | 28 | | |
| | | 419052 | 20 | | |
| | **செலவுகள்** | | | | |
| 1) | கருத்தரங்குகள், விழாக்கள், ஒன்று கூடல்கள் | | | 116025 | 00 |
| 2) | போட்டோ பிரதிகள், கணணிவேலைகள், சிறிய பதிப்பு வேலைகள், மற்றும் விளம்பரச் செலவுகள் | | | 16037 | 00 |
| 3) | போக்குவரத்துச் செலவு | | | 1715 | 00 |
| 4) | தளபாடக் கொள்வனவு (சொத்துக்கள்) | | | 30000 | 00 |
| 5) | நானாவித செலவுகள் | | | 29200 | 00 |
| 6) | கடந்தவருட முற்பணம் பொருளாளருக்கு மீள்ளிப்பு செய்தது | | | 2410 | 00 |
| | | | | 195387 | 00 |
| | கடந்த ஆண்டு கணக்கு மீதி (வங்கி மட்டும்) | 111122 | 49 | | |
| | | 530174 | 69 | | |
| | **கையிருப்பு** | | | | |
| | 30.11.2013 ல் வங்கி மீதி | | | 328174 | 69 |
| | 30.11.2013 ல் காசு மீதி | | | 6613 | 00 |
| | | 530174 | 69 | 530174 | 69 |

எம்மால் உறுதி செய்யப்படுகிறது

| | |
|---|---|
| ................................... | ................................... |
| (கா. றஞ்சனதாஸ்) | (து. சத்திவேல்) |
| தலைவர் | பொருளாளர் |

நான் வல்வை மாலுமிகள் நலன் புரிச் சங்க கணக்குகளை பற்றுச்சீட்டு, வங்கிப் புத்தகம்,வங்கிப் பற்றுச்சீட்டு என்பவறறின் உதவியுடன் 24-01-2012 தொடக்கம் 30-11-2013 வரையான காலப்பகுதியின் சரிபார்த்து உறுதிப்படுத்துகிறேன்.

...................................

ஆ. நாகலிங்கம்

கணக்காய்வாளர்

# உங்களுக்கு எமது உள்ளங்கனிந்த நன்றிகள்

- 2011ம் ஆண்டு அங்குரார் பணவைபவத்தை நடாத்த தலைமை தாங்கிய திரு.சிவகுகதாசன் மாணவர் மற்றும் அ.மி பாடசாலை மண்டபத்தை இதற்கென தந்துதவிய அப்போதைய அதிபர் திரு.சத்தி
- ஆங்கில வகுப்புக்கள் நடாத்த இலவசமாக மண்டபத்தை ஒதுக்கித்தந்த நகரபிதா திரு.ந.அனந்தராஜ்
- எமது வகுப்புக்களை நடாத்த இடம் தந்த VDAG மற்றும் VEDA நிர்வாகம்.
- எமது காரியாலய தேவைகளுக்கும் வகுப்புக்களுக்கும் இடம் தந்து உதவிக்கொண்டிருக்கின்ற வல்வை ஒன்றிய நிர்வாகிகள்.
- அவ்வப்போது எமது நடவடிக்கைகளையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வைக்கும் வல்லையை மையமாக கொண்ட அனைத்து இணையத்தளங்கள்
- எமக்காக விரைவுரைகளை மேற்கொண்ட விரிவுரையாளர்கள் மற்றும் ஆங்கில வகுப்புக்களை நடாத்தித்தந்த Capt.S.பாஸ்கரன் குடும்பத்தினர்
- விசேட அன்பளிப்புக்கள் மூலம் நிதியுதவி வழங்கிய உள்ளுர், வெளியூர் நலன்விரும்பிகள்.
- கனடாவில் எமது முதலாவது கிளையை ஆரம்பித்து வைத்து நிதியுதவியும் செய்த பிரமுகர்களான திரு.T.சண்முகதாஸ், திரு.S.கலிங்கராஜன் மற்றும் கடல்வாழ் நலன்விரும்பிகள்
- வெளிநாடுகளில் வசித்துக் கொண்டே எமக்கு ஆக்குமும் ஊக்கமும் அறிவுரைகளும் வழங்கும் அனைத்து பிரமுகர்கள்.
- ஆழக்கடல் வென்றவர்கள் நூல்வெளியீட்டுக்கென நிதி உதவிபுரிந்த அவுஸ்திரேலியாவில் வாழும் திரு.A.இராஜசேகரம்.
- வேலைவாய்ப்பு பிரச்சினையை தீர்க்க உதவிபுரிந்து கொண்டிருக்கும் கப்பலில் வேலைபுரியும் எமது ஊர் மாலுமிகள்

எமது சங்கத்தின் கணினி வேலைகள் அச்சுப்பதிப்புக்கள் பிரசுரங்கள் என்பவற்றை தயாரிக்க உதவிபுரிந்து கொண்டுவரும் வல்லை V2 நிறுவனத்தினர் மற்றும் திருநெல்வேலி - ”Guru Printers" அத்துடன் சகல அபிமானிகளுக்கும் எமது நன்றிகள் உரித்தாகட்டும்.